கடன் கணக்கில் ரூ.50,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (26-6-2024), புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8-49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

83. 14-10-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2 இல் வெளியிடப்பட்ட பொதுத் துறையின் II(2)/PUEL/778(C)/2005 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 11-1-2024 ஆம் நாளிட்ட மனித வள மேலாண்மைத் (நி.சீ.3) துறையின் அரசாணை (நிலை) எண் 3 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 29(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

84. தமிழ்நாடு அரசு உருவாக்கிய தீவிரவாத தடுப்புப் பிரிவுக்கு 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பொருந்தாது எனக் குறிப்பிடுவது குறித்து 23-2-2024 ஆம் நாளிட்ட மனித வள மேலாண்மைத் (நி.சீ.3) துறையின் அரசாணை (நிலை) எண் 30 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 29(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

85. 2020-2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் கணக்குகள்

மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.] (ஆங்கிலம்)

86. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

225. மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2024–2025. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

226. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

227. மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2024–2025. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

228. பொதுப் பணித் துறை பற்றிய திட்டச் சாதனை, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

229. பொதுப் பணித் துறை பற்றிய மக்கள் சாசனம், 2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

230. மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2024–2025. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

231. மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2024–2025. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

232. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்